

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) சென்னை, தியாகராயர் நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலை போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில், அவருக்கு பொன்னாடை அணிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் புத்தகத்தை வழங்கி பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி. ராமச்சந்திரன், அப்துல் சமது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் வீரபாண்டியன் மற்றும் பெரியசாமி, ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக மருத்துவ அணி உறுப்பினர் அடையாள அட்டையை வெளியிட்டார்கள். கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமைக்கழக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மருத்துவ அணி மாநில செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணி மாநிலத் தலைவர் மரு.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு.கலை கதிரவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2024) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### பட்டுக்கோட்டை நகரத்தில் – துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் கோவி.செழியன் – கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. – ச.முரசொலி எம்.பி. பங்கேற்பு!

தஞ்சாவூர் டிச.27.

தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு நாளை (28.12.2024 - சனிக்கிழமை) மாலை 06.00 மணியளவில் பட்டுக்கோட்டை பஜார் பள்ளி அருகில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பட்டுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.என்.செந்தில் குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ந.அசோக்குமார் எம்.எல்.ஏ, பழஞ்சூர் கே. செல்வம், பட்டுக்கோட்டை தொகுதி பார்வை யாளர் முனைவர் சி.குறிஞ்சிவாணன், மு. மாவட்ட அவைத்தலைவர் மிசா.அ.அப்துல்சமது, பட்டுக்கோட்டை நகர்மன்ற தலைவர் எஸ்.சண்முகப்பிரியா, முன்னாள் நகர்மன்ற தலைவர் பிரியா இளங்கோ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். தலைமைக் கழக பேச்சாளர் ந.மணி முத்து சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள் சு.ப. சேகர், ஆர்.பி.ரமேஷ், ஞா.மைக்கேலம்மாள், எஸ்.ஹெச்.அஸ்லம், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.மு.ரூசுவெல்ட், கௌ.கௌசல்யா, ஆதி. ராஜேஸ், நகரக் கழக நிர்வாகிகள் எஸ்.ஸ்ரீதர், ராயல் வி.குமார், விஜயலெட்சுமி சீனிவாசன், எஸ்.வெங்கடேசன், சு.தனபால், கே.வி. அழகேசன் மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர்க் கழகச் செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொள்ள உள்ளனர்.

விழா முடிவில் நகர துணைச் செயலாளர் என். ராமகிருஷ்ணன் நன்றியுரையாற்றுகிறார்.



தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு. நாகராசன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரச் செயலாளர் ந.தினேஷ்குமார் ஏற்பாட்டில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இதில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்! கலைஞருடன் நட்புக் கொண்டவர்!

# முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 100வது பிறந்த நாளில் தமிழ்நாட்டிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நினைவு கூர்வோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 27-

மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்களிடம் நட்பு கொண்டவர். தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய பணியை அவரது 100வது பிறந்த நாளில் நினைவு கூர்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நூறாவது பிறந்தநாளில் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய பங்களிப்பினையும், நமது தலைவர் கலைஞர் அவர்களுடன் அவர் கொண்டிருந்த நட்புறவினையும் நினைவுகூர்கிறோம்.**

**வலதுசாரிக் கருத்தியல் கொண்டவராக இருந்தாலும், பிரதமர் பொறுப்பில் இருந்தபோது நாட்டின் மதச்சார்பின்மைப் பண்பை அவர் பேணிக்காத்தார். அவரது வாழ்வும் பணியும் நிலைத்து நிற்கும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக செய்தி தொடர்புச் செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவர் பாபு உள்ளார்.



சிங்கப்பூர் நாட்டில் அமைந்துள்ள Gardens by the Bay எனும் நகர்ப்புற பூங்காவை அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இயற்கையின் அவசியத்தை உணர்த்தும் இந்தப் பூங்கா 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1.5 மில்லியனுக்கும் அதிகமான தாவரங்களைக் கொண்டுள்ள இப்பூங்காவினை இதுவரை 100 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிட்டு உள்ளார்கள். இயற்கை ஆர்வலர்களும், அறிவியலாளர்களும் வியந்து பார்க்கும் Gardens by the Bay பூங்காவினை மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்டதில் மகிழ்ச்சி என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிவிட்டுள்ளார்.




கள்ளக்குறிச்சியில் தமிழக துணை முதல்வர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற இறகுப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுத் தொகை மற்றும் பரிசு கோப்பை வழங்கினார், அருகில் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. தே.மலையரசன் எம்.பி. ஆகியோர் உடன் உள்ளனர்.